**யடியன்தொட்ட பிரதேச சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

யடியன்தொட்ட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யடியன்தொட்ட பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க

கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 953,413 ஆன வேலைக்காக உடன்படிக்கை செய்திருக்காத போதும் அதற்கு கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்வில்லை. | சரி செய்வதென. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டின் போது உடன்படிக்கை செய்திருந்த போதும் 2023 ஆண்டிற்கு தொடர்புபடுத்தாத வேலைக்கு மற்றும் 2023 ஆண்டில் நிறுத்தற் பணமும் செலுத்தப்பட்ட ரூபா 1,167,217 பெறுமதியான 02 வேலைகளிற்காக கடன்கொடுனர் மற்றும் கடன்படுனர் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதென. | - மேற்படி - |
| (இ) | ரூபா 283,340 ஆன மூலதன தன்மையிலான செலவு, மீண்டுவரும் செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |

#### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 294,348,584 ஆன 06 கணக்கு விடயங்களிற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏதிர்காலத்தில் சரி செய்வதென. | குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 20 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையால் திருத்திய நிதிப் பிரமாணம் 371(2)(அ) | நிமித்த கட்டுநிதி உரிய பணி முடிவடைந்தவுடன் தீர்க்க வேண்டிய போதும், 05 சந்தர்ப்பங்களில் ரூபா 55,467 தொகை 04 நாட்கள் மற்றும் 29 நாட்கள் இடையில் தாமதித்தும், பட்டியல்களினால் தீர்த்தல் 18 சந்தர்ப்பங்களில் ரூபா 421,224 தொகை 14 நாட்கள் மற்றும் 40 நாட்கள் இடையில் தாமதித்தும் தீர்க்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 2235/54 மற்றும் 2021 ஜுலை 08 திகதிய வர்த்தமானியில் அரச ஆணைக்குழுவின் 1978 இன் 48 இலக்க நகர அபிவிருத்தி சட்டத்தின் 83 (1) பிரிவு | 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை கிடைத்த அங்கீகார விண்ணப்பங்கள் 67 இல் 44 விண்ணப்பங்களிற்காக, இணக்கப்பாட்டு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. அது கிடைத்த விண்ணப்ப எண்ணிக்கையின் 65 சதவீதத்தை எடுத்திருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2010 மார்ச் 24 திகதிய இலக்கம் 08/2010 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவை | சபைக் சொந்தமாக 06 ஏக்கர்களில் காணப்பட்ட 07 மயானங்கள், மயானங்களாக பிரசுறிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றின் உரிமையை சுவீகரிக்க மற்றும் எல்லைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,889,217 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,784,468 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 4,598,013 | 5,159,810 | 5,467,151 | 897,194 | 4,306,642 | 4,475,968 | 4,262,495 | 1,204,536 |
| (ii) | வாடகை | 10,096,800 | 11,336,148 | 11,209,228 | 191,307 | 8,479,900 | 7,874,817 | 8,417,067 | 153,951 |
| (iii) | அனுமதிப்பத் திர கட்டணம் | 850,020 | 1,162,116 | 1,162,116 | - | 850,050 | 957,409 | 967,009 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,550,000 | 9,149,671 | 9,952,665 | 932,617 | 5,139,700 | 8,413,354 | 7,458,054 | 1,204,735 |
| | | 18,094,833 | 26,807,745 | 27,791,161 | 2,021,118 | 18,776,292 | 21,721,548 | 21,104,625 | 2,563,222 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டிய ரூபா 600,147 ஆன சொத்துக்கள், இன்வென்றி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும். |
| (ஆ) | பெகோ இயந்திரம் செயலிழந்து காணப்பட்ட காலத்திற்காக பயன்படுத்தாத சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்ளாததால் வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி கட்டணமாக ரூபா 143,704 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | செயலிழந்து காணப்பட்ட காலத்திற்காக பயன்படுத்தாத சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நடவடிக்கைகளிற்காக ஹெக்டயார் 0.404 காணியில் அனுமதியற்ற நிர்மாணம் மற்றும் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களை தவிர்க்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ஆபத்தான மரங்களை வெற்றி அகற்ற கிடைத்த 188 விண்ணப்பங்களில் தீர்வு வழங்கப்படாத எண்ணிக்கை 136 ஆனதில் அது 72 சதவீதமான உயர்ந்த சதவீத்தை பெற்றிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | ஆபத்தான மரங்களை அகற்ற கிடைத்த விண்ணப்பங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 பதவிகளில் 20 வெற்றிடங்கள் 2014 ஆண்டு முதல் 2023 ஆண்டு காலமாக நிலவுகின்றன. அவ்வாறே, வேலை/கள தொழிலாளர் பதவிக்காக சேவை உடன்படிக்கையின் மீது 12 பேர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | சேவை உடன்படிக்கையின் மீது 12 ஊழியர்கள் வெற்றிட பதவிகளிற்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சுகாதார தொழிலாளர் 05 வெற்றிடங்களிற்காக சேவை உடன்படிக்கையின் மீது ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், அங்கு நிரந்தர ஊழியர் இருவர் சாரதி கடமைக்கு ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். | ஆட்சேர்க்கும் நோக்கத்திற்கு தடை ஏற்படாதவாறு ஊழியர்களை ஈடுபடுத்துவதென. | - மேற்படி - |
| (இ) | மருந்து கலவையாளர்கள் பதவி ஒன்றிற்கு 2023 திசெம்பர் இலிருந்து ஒருவர் நியமிக்கப்பட்டள்ள போதும், மருந்து கலவையாளர்கள் பதவிக்குரிய பயிற்சிகள் எதுவும் அவரிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அவரிற்கு இருந்த தகைமையாவது, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் க.பொ.ச (சாதாரண தரம்) சித்திர பாடம் மாத்திரம் சித்தியடைந்திருந்தது மாத்திரமே. | ஆயுர்வேத மருந்து சாலையில் கடமை தொடர்பான பயிற்சிக்காக ஈடுபடுத்தி டிரெக் வண்டி செலுத்துவதற்காக மற்றும் வெற்றிடமாகவுள்ள காவல் கடமை நடவடிக்கைக்காக தேவையின் நிமித்தம் ஈடுபடுத்துவதென. | தகைமையற்ற நபர்களிற்கு கடமைகளை ஒப்படைக்க கூடாததுடன் ஆட்சேர்த்தவரை உரிய கடமையில் ஈடுபடுத்த வேண்டும். |
| (ஈ) | ஆண்டு 1985 – 2014 காலத்தினுள் கடமையாற்றிய 25 ஊழியர்களிடமிருந்து நிலுவை ரூபா 112,607 ஆன கடன் மீதியொன்றை 2023 ஆண்டிறுதி வரை அறிவிட்டிருக்கவில்லை. | மாவட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை கடனை அறிவிட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,298,000 பெறுமதியான 02 வாகங்களை சுவீகரித்திருக்கவில்லை. | டிரெக்டர் மற்றும் டேலரை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | சொத்துக்களின் உரிமை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 4,607,500 ஆன 07 வாகனங்கள் மற்றும் ஒரு நீர் பவுசர் 02 ஆண்டுகள் முதல் 14 ஆண்டுகளாக செயலற்று காணப்பட்ட போதும், அதனை திருத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குழுவொன்றின் மூலம் பராதீனம் செய்ய வேண்டும் மற்றும் திருத்த வேண்டிய வாகனங்களை இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | செயலற்ற வாகனத்தை பராதீனம் அல்லது திருத்த வேண்டும். |
| (இ) | 2017 ஆகஸ்ட 16 திகதிய 04/2017 கொண்ட சமரகமுவ மாகாண திறைசேரி சுற்றறிக்கைக்கு மாற்றமாக காணி மற்றும் கட்டிடங்களிற்காக அரச மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக தலைவர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட குழுவொன்றின் மூலம் மேற்கொண்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 07 காணிகள் மற்றும் 20 கட்டிடங்களிற்காக ரூபா 120,381,900 பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | அரச மதிப்பீட்டை பெற்று கணக்கீடு செய்யவதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |